பக்கங்கள்:-20

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | மார்கழி 06 | வெள்ளிக்கிழமை | 22.12.2023 | அதிர்வு 143

நல்லிணக்கம் தொடர்பில்

## தமிழ் எம்.பிக்களுடன் ரணில் நேற்று பேச்சு

(சீ.ஏ.தமிழ்மாறன்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 06▶



- இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துக
- வடக்கு - கிழக்கு இணைந்த தீர்வில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை

# ‘நல்லிணக்கக் கொடி’யைக் காண்பித்து எம்மைத் தொடர்ந்தும் ஏமாற்ற முடியாது!

## சர்வதேசத்தை நாடும் நிலைக்குத் தள்ளிவிடாதீர்கள்; ரணில்முன் கடும் தொனியில் சம்பந்தன் தெரிவிப்பு

(சீ.ஏ.தமிழ்மாறன்)

“வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சர்வதேச ஒப்பந்தமான இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். வடக்கு - கிழக்கு மாகாணங்கள் மீள இணைக்கப்பட்டு நிரந்தர அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்ற எங்கள் நிலைப்பாட்டில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. அரசியல் தீர்வற்ற வெறும் ‘நல்லிணக்கக் கொடி’யைக் காண்பித்து எங்களைத் தொடர்ந்தும் ஏமாற்ற முயலாதீர்கள். நாம் தொடர்ந்தும் ஏமாறத் தயாரில்லை.”

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் கடும் தொனியில் தெரிவித்தார். 06▶

## இந்த ஆட்சியில் அரசியல் தீர்வு இல்லை; புதிய நாடாளுமன்றிலேயே அது சாத்தியம்

### சம்பந்தனின் கருத்துக்கு ரணில் பதில்



(சீ.ஏ.தமிழ்மாறன்)

“அடுத்த புதிய நாடாளுமன்றம் தெரிவாகி ஒரு வருடத்துக்குள் புதிய அரசமைப்பை உருவாக்கி அதனூடாகவே தீர்வைக் காணும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். 06▶




ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க – நீதியரசர் விக்னேஸ்வரன் இடையிலான குறுகிய கால நட்புறவு இப்போது அவுட்!

தமக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத ஜனாதிபதி ரணிலுடன் என்ன சகவாசம் – சிநேகபூர்வ ஊடாட்டம் – நட்புறவு – வேண்டிக் கிடக்கின்றது என்று அதைத் தூக்கிக் கடாசிவிட்டார் நீதியரசர்.

நல்லது. 06▶

# தென்னக்கோனின் நியமனத்தை இரத்துச்செய்யுங்கள்: ஜனாதிபதிக்கு சட்டத்தரணிகள் கூட்டிணைவு கடிதம்!



பதில் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டிருக்கும் தேசபந்து தென்னக்கோனின் நியமனத்தை இரத்துச் செய்யுமாறு வலியுறுத்தி சட்டத்தரணிகள் கூட்டிணைவு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளது.

கடந்த 2011 ஆம் ஆண்டு மிரிஹான பொலிஸ் நிலையத்தில் நபரொருவரைக் கைதுசெய்து தன்னிச்சையாகத் தடுத்துவைத்து, சித்திரவதைகளுக்கு உட்படுத்தியதன் மூலம் அவரது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டிருக்கின்றன எனவும், எனவே அதற்குப் பொறுப்பாளிகளான தேசபந்து தென்னக்கோன் உள்ளிட்ட 4 பொலிஸ் அதிகாரிகள் பாதிக்கப்பட்ட நபருக்கு தமது சொந்தப்பணத்தில் நட்டஈடு செலுத்த வேண்டுமெனவும் கடந்த 14 ஆம் திகதி உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே பதில் பொலிஸ் மா அதிபர் பதவியிலிருந்து தேசபந்து தென்னக்கோனை நீக்குமாறுகோரி ஜனாதிபதி சட்டத்தரணிகளான ஜயம்பதி விக்ரமரத்ன, எம்.ஏ.சுமந்திரன், சாலிய பீரிஸ், உபுல் குமாரப்பெரும, ஏர்மிஸா ரீகல், ஜெஃப்ரி அழகரட்ணம் உள்ளிட்ட பலரால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் சட்டத்தரணிகள் கூட்டிணைவு ஜனாதிபதிக்குக் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளது.

அதுமாத்திரமன்றி சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பது குறித்து சட்டமா அதிபர் ஊடாக ஆராயுமாறும் அக்கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# ஏறாவூரில் போதை வியாபரிகளின் வீடுகளை மேப்ப நாய்கள் சகிதம் பொலிஸார் முற்றுகை

## ஒரு பெண் உட்பட 4 வியாபாரிகள் கைது போதைப் பொருள்கள் மீட்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள போதை பொருள் வியாபாரிகளின் வீடுகளில் மேப்ப நாய் சகிதம் இராணுவத்தினர் மற்றும் விசேட அதிரடிப் படையினர் பொலிஸாருடன் இணைந்து நேற்று வியாழக்கிழமை அதிகாலை 2 மணிக்கு சுற்றிவளைத்து, முற்றுகையிட்டு சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அப்போது பெருமளவிலான கேரளக் கஞ்சா, ஹறோயின், ஐஸ் போதை பொருள்கள் மற்றும் பணம் என்பன கைப்பற்றப்பட்டன. பெண் ஒருவர் உட்பட 4 வியாபாரிகள் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பதில் பொலிஸ் மா அதிபரின் ஆலோசனையில் நாடளாவிய ரீதியில் இடம்பெற்றுவரும் போதை ஒழிப்பு திட்டத்தின் கீழ் கிழக்கு பிராந்திய சிரேஷ்ட உதவி பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹணவின் நெறிப்படுத்தலில் உதவி பொலிஸ் மா அதிபர் எம்.பி.லியனகே, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அமல் ஏ.எதிரிமானவின் வழிகாட்டலில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, இராணுவத்தினர், விசேட அதிரடிப்படையினர் ஒன்றிணைந்து இந்த நடவடிக்கையை முன்னெடுத்தனர்.




நேற்று அதிகாலை 2 மணிக்கு புலனாய்வு மற்றும் இரகசியத் தகல்களின் அடிப்படையில் ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசங்களில் போதை பொருள் வியாபரிகளின் வீடுகளை தேடி மேப்ப நாயுடன் முற்றுகையிட்டு அதிகாலை 6 மணிவரை சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டன. பெண் ஒருவர் உட்பட 4 வியாபாரிகளை பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.







ஆ.இளங்கோ
(ஓய்வு பெற்ற வலயக் கல்விப்பணிப்பாளர்,
அளவெட்டி)

# இன்று உத்தராயன ஆரம்பம்

சூரியனின் தெற்குநோக்கிய மற்றும் வடக்கு நோக்கிய நகர்வு அயனநகர்வு எனப்படும். சூரியன் வடக்கு நோக்கி நகருவதாக தோற்றும் ஆறு மாத காலத்தை வடசெலவு (உத்தராயனம்) எனவும் பின்பு தெற்கு நோக்கி நகருவதாக தோற்றும் ஆறு மாத காலத்தை தென்செலவு (தட்சணாயனம்) எனவும் சொல்லப்படுகின்றது.

பொதுவாக சூரியன் கிழக்கில் உதிப்பதாகவே சொல்கின்




றோம். ஆனால் உண்மையில் சூரியன் உதிக்கும் தானம் பூவியிலிருந்து நோக்குவோருக்கு ஒரே நிலையான புள்ளியில் வருடம் முழுக்க தோற்றுவதில்லை.


**நிலைமாற்றம் அடைகிறது.**

சூரியன் ஒரு குறிப்பிட்ட நாளில் மட்டும் தான் உண்மை வடக்கிலிருந்து 90 பாகையில் உள்ள சரியான கிழக்கே தோற்றும். அதன்பின் தினந்தோறும் வட திசை நோக்கி 23.5பாகை வரை நகர்ந்து கடகரேகையை அடைந்த பின்னர் (ஜுன் 20 /21) பின்னர் மீண்டும் தென் திசை நோக்கி நகர ஆரம்பிக்கும்.

இதன்போது மீண்டும் ஒருமுறை சரியான கிழக்கை அடைந்து தொடர்ந்து , தென் திசை நோக்கி 23.5 பாகை வரை நகர்ந்து மகரரேகையை அடைந்த பின்னர் (டிசெம்பர்21/22) மீண்டும் வட நோக்கி நகர்வதான தோற்றத்தை அளிக்கும். இவ்வாறு நகர்வு தோற்றத்தை ஆரம்பிக்கும் நாள்கள்

அயனநாள்கள் (Solstices) எனப்படும்.

சிறப்பும், மங்களகரமுமானது உத்தராயனம் . சோழர் காலத்திலும், பல்லவர்கள் காலத்திலும் உத்தராயன சங்கராந்தி எனும் பெயரில் அன்றைய காலத்தில் பொங்கல் விழா




கொண்டாடப்பட்டிருக்கிறது.

இன்று முதல் அடிவானத்தில் சூரியனின் நகர்வை தொடர்ச்சியாக நோக்கி வந்தால் உத்தராயனம் என்ற சூரியனின் வடதிசைநோக்கிய இயற்கை நகர்வுத்தோற்றத்தை அவதானித்து மகிழலாம்.



# தமிழருக்கான தீர்வு பற்றி களத்தில் நிற்கும் தமிழ்த் தலைவர்களே அரசுடன் பேச வேண்டும்

## உலகத் தமிழர் பேரவை விளக்க அறிக்கை



தமிழர்களுக்கான அரசியல் தீர்வு குறித்து அரசுடன் தாம் பேச்சு நடத்துவதாகக் கூறப்படுவதை உலகத் தமிழர் பேரவை மறுத்துள்ளது. இது தொடர்பில் அறிக்கையொன்றை விடுத்துள்ள உலகத் தமிழர் பேரவை, களத்தில் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தலைவர்களே உரிய நேரத்தில் அதனை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

“மத மற்றும் இனக்குழுக்களுக்கு இடையில் கூடுதலான புரிதலை வளர்ப்பதே எமது நோக்கமாகும். இது, தேசியப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை காணும் பேச்சின்போது அதில் பங்கேற்பவர்களுக்கு உதவியளிக்கும்.

அத்துடன் அதன் முடிவைக் குழப்புவதற்கும், அனைவருக்கும் சிறந்த இலங்கை என்ற தமது பார்வைக்கு குறைவான எதிர்ப்பே இருக்கும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

இலங்கையின் வெவ்வேறு பௌத்த பீடங்களின் மூத்த பௌத்த பிக்குகள் மற்றும் உலகத் தமிழர் பேரவை ஆகியவற்றின் உறுப்பினர்களைக் கொண்ட தூதுக் குழு டிசம்பர் 7ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை இலங்கையில் பல்வேறு சந்திப்புக்களில் ஈடுபட்டிருந்தது.

இது 2023 ஏப்ரலில் நேபாளம் நாகர்கோட்டில் இடம்பெற்ற பலனளிக்கும் உரையாடலின் தொடர்ச்சியாக இருந்தது, இதன் அடிப்படையிலேயே இலங்கையில் உள்ள பல்வேறு சமூகங்களுக்கிடையில் ஈடுபாடு மற்றும் முயற்சிகளை எளிதாக்குவதற்காக இரண்டு தரப்பினரும் இமயமலைப் பிரகடனத்துக்கு உடன்பட்டனர்.

இது தொடர்பான தேசிய உரையாடல் உத்தியோகபூர்வமாக இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டு பல மத, அரசியல் மற்றும் சமூகத் தலைவர்களிடம், பிரகடனம் கையளிக்கப்பட்டதுடன், கலந்துரையாடல்களும் நடத்தப்பட்டன.

சமயங்களுக்கிடையில் புரிந்துணர்வையும் நல்லிணக்கத்தையும் ஊக்குவித்தல் சமாதானத்தை கட்டியெழுப்பும் முயற்சிக்கு அடிப்படையானது. எனவே தான் இந்த ஈடுபாடுகள் முதன்மையாக மதத் தலைவர்களை மையமாகக் கொண்டிருந்தன.

இதனடிப்படையில் நான்கு பௌத்த பிரிவுகளின் மகாநாயக்க தேரர்கள், நல்லை ஆதீனம், கொழும்பு பேராயர் , தேசிய கிறிஸ்தவ பேரவை மற்றும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் தலைவர்களுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

அத்துடன் ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட அனைத்து தேசிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள், தமிழ், மலையகத் தமிழ் மற்றும் தமிழ் பேசும் முஸ்லிம் சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கிய அரசியல் தலைவர்கள், முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் முன்னாள் சபாநாயகர் ஆகியோரை இந்தப் பிரதிநிதிகள் குழு சந்தித்தது.

பெரும்பான்மை சமூகத்தினரிடையே கணிசமான ஆதரவுத் தளத்தைக் கொண்ட ஒரு கட்சியின் தலைவராக மஹிந்த ராஜபக்ஷவை இந்தக் குழு சந்தித்தது.

மேலும் அவரது ஆதரவுத் தளம் பௌத்த விகாரைகளின் உதவியுடன் கட்டப்பட்டது என்பதாலும் அவருடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

எனினும், இந்த ஒரு வார காலப்பகுதியில் மூன்று மொழிகளிலும் ஊடகங்களின் செய்திகள் விதிவிலக்காக இருந்தன.

இந்தநிலையிலும் கலந்துரையாடல்கள் ஒவ்வொன்றின் போதும், குழுவினர் பெற்ற ஆதரவு, ஊக்கம் மற்றும் ஆசீர்வாதங்கள் ஊக்கமளிப்பதாகவும், எங்கள் எதிர்பார்ப்புகளுக்கு அப்பாற்பட்டதாகவும் இருந்தன.

எந்தவொரு வெளி அரசியல் பங்குதாரர்கள் அல்லது நாடுகளின் ஈடுபாடு இல்லாமல் சிறந்த இலங்கைக்கான சங்கம் மற்றும் உலகத் தமிழர் பேரவை ஆகிய இரண்டு குழுக்களுக்கு இடையேயான பிரத்தியேகமான முயற்சி இதுவாகும்.

பல தசாப்தங்களாக அவர்களைப் பீடித்துள்ள சந்தேகங்களையும் அச்சங்களையும் நீக்கி அனைத்து சமூகங்களுக்கிடையில் புரிந்துணர்வை மேம்படுத்துவதற்காக தேசிய உரையாடலை ஆரம்பிப்பதே இதன் நோக்கமாகும்.

உதாரணமாக, தமிழர்களின் கண்ணோட்டத்தில், அரசியல் தீர்வுக்கான எந்தவொரு முயற்சியையும் பௌத்த பிக்குகள் எப்போதும் முறியடித்தனர். அதே சமயம் பெரும்பான்மை சமூகம் சமீப காலங்களில் செல்வாக்குமிக்க தமிழ் புலம்பெயர்ந்தோர் நாட்டை அழிப்பதிலும் அதன் முன்னேற்றத்தைத் தடுப்பதிலும் முனைந்திருப்பதாக நினைத்தனர்.

எனவே, இரண்டு “வெளிப்படையான எதிரிகள்” இடையே ஒரு உரையாடல் தர்க்க ரீதியானதாகத் தோன்றியது.

கடந்த 75 ஆண்டுகால காணப்பட்ட அவநம்பிக்கையை 7 நாள்களில் மாற்றிவிட முடியாது.

எனினும், நாட்டில் ஏற்பட்டுள்ள தீவிர அரசியல் மற்றும் பொருளாதார சவால்களை கருத்தில் கொண்டு, இந்த நிலைமைகள் புதிய விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளன.

எனவே, சமரசம் மற்றும் தேசிய உரையாடல் ஆர்வத்துடன் தொடங்குவதற்கான புதிய வாய்ப்புகளை நாம் உறுதியாக நம்புகின்றோம்.

இமயமலைப் பிரகடனம் என்பது சிறந்த இலங்கைக்கான சங்கம் மற்றும் உலகத் தமிழர் பேரவை ஆகியவற்றுக்கு இடையேயான ஒரு கட்டமைப்பு ஒப்பந்தமாகும்.

05▶

# அஸ்வெசும கொடுப்பனவுகள் வங்கிகளுக்கு அனுப்பப்பட்டன

அஸ்வெசும நிதி திட்டத்தின் டிசம்பர் மாதத்துக்கான கொடுப்பனவுகள் வைப்பிடலிடப்பட்டுள்ளன.

இதற்காக 879 கோடி 30 இலட்சம் ரூபா வங்கிகளுக்கு மாற்றப்பட்டுள்ளன என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தத் தொகை பதிவு செய்யப்பட்ட 14 இலட்சத்து 10 ஆயிரத்து 64 அஸ்வெசும பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

## தமிழருக்கான தீர்வு....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இது, தேசிய உரையாடலுக்கு ஒரு பயனுள்ள தொடக்க புள்ளியாக இருக்கும். பன்மைத்துவம், அதிகாரப் பகிர்வு மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை வெளிப்படுத்தும் இந்த பிரகடனம் பௌத்த பீடங்களின் பிரதான பீடாதிபதிகள் உட்பட நாட்டிலுள்ள அனைத்து முக்கிய பங்குதாரர்களிடமிருந்தும் ஒப்புதலையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுள்ளது.

இவை உண்மையிலேயே குறிப்பிடத்தக்க விளைவுகளாகும், அவை நாட்டை சிறந்ததாக மாற்றும்.

இலங்கை மற்றும் புலம்பெயர் நாடுகளில் உள்ள சில தமிழ் குழுக்கள், இந்த முயற்சியை இலக்காகக் கொண்ட சில விமர்சனங்களை வெளியிட்டப்பட்டுள்ளன.

இந்தக் கருத்துக்கள் முற்றிலும் தவறானவை என்பது தமது தாழ்மையான பார்வையாகும். இருப்பினும், அவர்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்துவது மிகவும் ஊக்கமளிக்கின்றது.

இந்தநிலையில், அனைத்துக் கருத்துக்களையும் செவிமடுத்து உண்மையிலேயே தொடங்கியுள்ள தேசிய உரையாடலை வடிவமைப்பதும் முக்கியமான அம்சமாக அமைந்துள்ளது.

மூத்த பௌத்த பிக்குகள் மற்றும் உலக தமிழர் பேரவை ஆகிய இரண்டு தரப்புக்களும், ஒரு குறிப்பிட்ட தீர்வு அல்லது முடிவை பரிந்துரைப்பதை விட, ஒரு நல்ல மற்றும் நீடித்த முடிவை எளிதாக்குவதற்கான தேசிய உரையாடலை ஊக்குவிப்பதில் மட்டுமே தெளிவாக உள்ளன.

தமிழ்ச் சமூகத்தில் உள்ள சிலரால் இது குறித்து தவறான புரிதல்கள் வெளிப்படும் சூழலில், இது, அரசியல் தீர்வுகாக அரசுடனோ அல்லது நாட்டின் ஏனைய தலைவர்களுடனோ பேச்சு நடத்தும் நடவடிக்கையல்ல என்பதை தெளிவாகக் கூற விரும்புகின்றோம்.

களத்தில் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தலைவர்களே உரிய நேரத்தில் அந்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்." – என்றும் உலக தமிழர் பேரவை தமது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.


## இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்
## இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம்
## இணைந்து



"தாயகஒலி" பிரதம ஆசிரியர்

*தம்பு சிவா அவர்களின் (தம்பு. சிவசுப்பிரமணியம்)*

(அகவை 80) அமுத விழாவை முன்னிட்டு

நடத்தும்

### சிறுகதைப் போட்டி

இருபிரிவுகளாக நடத்தப்படும்

(பரிசுத் தொகை 1 இலட்சம்)

1. சிறுகதைப் போட்டி சகலருக்குமானது
2. பாடசாலை மாணவர்களுக்கான திறந்த போட்டி

* போட்டிக்கான படைப்புகள் அனைத்தும் சொந்தப்படைப்பாக அமைய வேண்டும். ஏற்கனவே வெளிவந்தபடைப்புக்கள் ஏற்றுக்கொள்ள படமாட்டாது.
* பாடசாலை மாணவர்களுக்கான ஆக்கப்படைப்புகள் யாவும் அப் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
* 2024ம் ஆண்டு பெப்ரவரி 15ஆம் (15.02.2024) திகதிக்கு முன் படைப்புகளை அனுப்பி வைக்க வேண்டப்படுகின்றீர்கள்.
* **நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.**

*அனுப்ப வேண்டிய முகவரி :*
இணைப்பாளர்
இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்
இல. 9 - 2/1 நெல்சன் பிளேஸ்
கொழும்பு 06.
தொடர்புகளுக்கு 0771 877 999, 011 2364124

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருவருக்கும் இடையில் தோழமை நீடித்த காலத்தில் நீதியரசர் ஒரு யோசனையை முன் வைத்தார். மக்கள் பிரதிநிதித்துவம் இல்லாத வடக்கு மாகாண சபையை ஜனாதிபதி ஒரு நிபுணத்துவ ஆலோசனைச் சபை மூலம் நிர்வகிப்பதுதான் அந்தத் திட்டம். அதற்கு ரணில் இணங்கினார் என்றும் நீதியரசர் கூறுகிறார். அத்திட்டத்தின்படி அந்த ஆலோசனைச் சபை ஆறு மாத காலத்தில் வடக்கு மாகாண சபைக்குரிய நூறு நியதிச் சட்டங்களை யாத்துத் தருமாம். ஜனாதிபதி தமக்குரிய அதிகாரங்கள் மூலம் அவற்றை சட்டமாக்குவாராம்.

தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட மாகாண சபைதான் நியதிச் சட்டங்களை யாக்கும் அதிகாரம் கொண்டது.

மாகாண சபைகளுக்கான அதிகாரப் பகிர்வில் முக்கிய அம்சம் அதுதான். அந்த அதிகாரப் பகிர்வை மீண்டும் ஜனாதிபதியிடமே கையளிக்கும் – கையிழக்கும் – முறைதான் நீதியரசரின் திட்டம்.

பகிரப்பட்ட அதிகாரத்தை திரும்பவும் ஜனாதிபதியிடம் கையளிக்கும் மோசமான திட்டம் இது என்று நீதியரசரின் யோசனை தமிழர் தரப்பினால் காட்டமாக விமர்சிக்கப்படுகின்றது.

அது அரசியல் தீர்மானம் என்று விட்டு விடலாம். ஆனால் இதை நீதியரசர் விக்னேஸ்வரன் கூறுவதில் கவனிக்க வேண்டிய விடயம் ஒன்று உள்ளது.

புதிதாக உருவாக்கப்பட்ட வடக்கு மாகாண சபையின் ஒரே முதலமைச்சர் அவர்தான். ஐந்து ஆண்டு காலம் முழுமையாகப் பதவியில் இருந்தவர். இந்த ஐந்து ஆண்டு காலத்தில் அவரது புதிய மாகாண சபையில் ஆக 23 நியதி சட்டங்களைத்தான் அவரது நிர்வாகம் கொண்டு வந்தது.

அப்போது, ஏனைய மாகாண சபைகள் ஏற்கனவே 25 ஆண்டுகள் இயங்கியிருந்திருக்கின்றன. அவையெல்லாம் நூற்றுக்கணக்கில் நியதிச் சட்டங்களை யாத்துள்ளன. அவை முன்மாதிரியாக இருக்கின்றன. அவற்றை அடிப்படையாக வைத்து வடக்கு மாகாணத்துக்கு தேவையான அவசர – அவசிய – நியதிச் சட்டங்களை நீதியரசர் விக்னேஸ்வரன் தலைமையிலான வடக்கு மாகாணசபை இலகுவாக, விரைவாக நிறைவேற்றி இருக்க முடியும். அதை நீதியரசர் விக்னேஸ்வரனின் மாகாண அரசு செய்யவில்லை. தவறு இழைத்து விட்டது.

இப்போது ஓர் ஆலோசனைச் சபையை மட்டும் வைத்து, ஆறு மாதங்களில் அவசியமான – நூறுக்கும் அதிக மான – நியதிச் சட்டங்களை உருவாக்க முடியும் என்று அவர் திட்டமிடுகின்றார். அத்த கைய எண்ணம் அவர் முதலமைச்சராக இருந்த ஐந்து ஆண்டுகளில் அவருக்கு இருந்திருக்குமானால் எத்தனை நியதிச் சட்டங்களை அவரால் உருவாக்கி இருக்க முடியும்? அப்படி செய்தாக வேண்டும் – அவசிய சட்டங்களை உருவாக்கி இருக்க வேண்டும் – என்ற ஞானம் இப்போது முதலமைச்சர் பதவியை விட்டு இறங்கிய பிறகுதான் அவருக்கு வந்திருக்கிறது.

கண் கட்ட பின்னர் சூரிய நமஸ்காரம்! அவ்வளவுதான்.

## தமிழ் எம்.பிக்களுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

இதன்போது நல்லிணக்கம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட்டன.

காணி, மீள்குடியமர்த்தல், நல்லிணக்கத்துக்கு அமைவாகச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல், தமிழக அகதி முகாம்களில் இருக்கும் இலங்கையரின் பிரச்சினைகள், வடக்கு, கிழக்கு அபிவிருத்தி தொடர்பில் சாத்தியமான கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பு கடந்த 13ஆம் திகதி நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த நிலையில், பின்னர் அந்தச் சந்திப்பு பிற்போடப்பட்டது.

நேற்று நடைபெற்ற சந்திப்பில் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி., கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இராசமாணிக்கம் சாணக்கியன், கோவிந்தன் கருணாகரம், தவராசா கலையரசன், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஆமாரசிங்க, பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க, நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் வசந்த பெரேரா, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் (ஓய்வு) கமல் குணரத்ன, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆர்.இம். சீ.எம்.ஹேரத், சுற்றாலா மற்றும் காணி அமைச்சின் செயலாளர் எச்.எம்.பீ.பீ. ஹேரத் உள்ளிட்டவர்களும், நல்லிணக்கம் தொடர்பிலான நிறுவனங்களின் பிரதானிகளும் கலந்துகொண்டனர்.

## 'நல்லிணக்கக் கொடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதிக்கும் வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று மாலை நடைபெற்றது. இதன்போதே சம்பந்தன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி அதன் அடிப்படையில் தமிழ் மக்களின் இனப்பிரச்சினையைத் தீர்க்காவிடின் இந்த நாட்டுக்கு எதிராகச் சர்வதேச சமூகத்தை நாங்கள் நாடுவோம். எனவே, அந்த நிலைமைக்கு எங்களைத் தள்ளிவிடாதீர்கள்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் உள்ளடங்கலாகப் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு எவ்வித தீர்வையும் பெற்றுத் தராத உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்மொழிவை ஏற்றுக்கொள்ள முடியாது. அதில் சர்வதேச மேற்பார்வை மற்றும் புதிய நீதிமன்ற முறைமை உள்வாங்கப்பட வேண்டியது அவசியம்." – என்றார்.

## இந்த ஆட்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதேவேளை, இந்த நாடாளுமன்றத்தில், அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் பறிக்கப்பட்ட அதிகாரங்களில் சில அதிகாரங்களை மீண்டும் வழங்குவது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதனூடாக மாகாண சபைகளைப் பலப்படுத்துவது குறித்தும் ஆராய்கின்றோம் என்றும் ஜனாதிபதி மேலும் கூறினார்.

ஜனாதிபதிக்கும் வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று மாலை நடைபெற்றது. இதன்போது, இந்திய – இலங்கை ஒப்பந்தம், வடக்கு – கிழக்கு மீளிணைப்பு, அதிகாரப் பகிர்வு, அரசியல் தீர்வு தொடர்பில் தமது நிலைப்பாட்டைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி. விலாவரியாக எடுத்துரைத்தார். அதற்குப் பதிலளிக்கும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார் என்று மேற்படி சந்திப்பில் கலந்துகொண்ட கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.




நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ரணிலை நம்பிப் பயனில்லை!

நாட்டின் தலைவர் என்ற முறையில் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டிய தனது தலையாய பொறுப்பை - கடப்பாட்டை - ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளிப்படையாகவே தட்டிக் கழித்து விட்டார். அது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியையும் நாட்டையும் விட்டுத் தப்பி ஓடிய சூழ்நிலையில், அவரின் எஞ்சிய இரண்டரை ஆண்டு கால ஜனாதிபதிப் பதவிக்கு வந்தவர் ரணில் விக்கிரமசிங்க.

13 ஆம் திருத்த நடைமுறையாக்கம், தீர்வு முயற்சி, நல்லிணக்க எத்தனம் என்றெல்லாம் பல கயிறுகளை அவ்வப்போது விட்டுக் கொண்டிருந்த அவர், தமது இந்தப் பதவி காலத்தில் நல்லிணக்கத்திற்கும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கும் எதுவும் செய்யப் போவதில்லை என்பதை நேற்று தமிழ் எம்.பிக்களுடனான சந்திப்பில் தெளிவுபட உறுதிப்படுத்தி விட்டார்.

பொதுத்தேர்தலில் புது நாடாளுமன்றம் ஏற்படுத்தப்பட்டு ஒரு வருடத்துக்குள் தீர்வு என்று இப்போது புது பலூனை அவர் பறக்க விட்டிருக்கிறார்.

பொதுத்தேர்தல் எப்போது வரும், புது நாடாளுமன்றம் எப்போது அமையும் என்பவை எல்லாம் இப்போது ஊகிக்க முடியாதவை.

அடுத்த ஆண்டில் ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் நடக்கும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இப்போது கூறி வந்தாலும் கூட, தற்போதைய நாடாளுமன்றத்துக்கு இன்னும் ஒன்றரை ஆண்டுகளுக்கு மேல் (சுமார் 20 மாதங்கள்) ஆட்சிக் காலம் உண்டு.

எது, எப்படி என்றாலும் ஜனாதிபதி ரணிலின் தற்போதைய பதவிக்காலம் அடுத்த ஒக்டோபர் வரைத்தான். அதற்கு இன்னும் பத்து மாதங்கள் உள்ளன. அந்தப் பதவி காலத்தில் தற்போதைய நாடாளுமன்றத்தை அவர் கலைத்துப் பொதுத் தேர்தலுக்கு வழி செய்வாரா? அல்லது ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் புதிதாக பதவியேற்கும் ஜனாதிபதி (அது ரணில் விக்கிரமசிங்கமாகவும் இருக்கலாம் அல்லது வேறு யாராகவும் இருக்கலாம்) நாடாளுமன்றத்தை முற்கூட்டியே கலைப்பாரா? அல்லது இந்த நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் 2025 ஒகஸ்டில் முடிவடையும் வரை நாடாளுமன்றம் தொடர்வதற்கு இடமளிப்பாரா? - என்பவை எல்லாம் இப்போது எதிர்வு கூற முடியாத விடயங்கள்.

இந்த நாடாளுமன்றம் தனது பதவிக் காலம் முடியும் வரை நீடிக்குமானால் பொதுத்தேர்தல் 2025 ஒகஸ்டின் பின்னர்தான் நடக்கும். அத்தகைய நிலையில் புதிய நாடாளுமன்றம் தெரிவாகி ஒரு வருடத்தில்தான் தீர்வு என்ற ஜனாதிபதி ரணிலின் தற்போதைய கணக்குப்படி அது நடப்பது 2026 ஒகஸ்ட் தாண்டி விடும்.

எது, எப்படியோ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நேற்றைய அறிவிப்போடு அடுத்த இரண்டரை ஆண்டுகளுக்கு - 2026 ஒகஸ்ட் வரை தீர்வு குறித்துப் பேசுவதில் பயனில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டு விட்டது.

இனி, வெறுமனே நல்லிணக்கம், அரசமைப்பில்உள்ளஅதிகாரப்பகிர்வைநடைமுறையாக்கம் செய்தல், 13 ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்தல் என்ற விடயங்களை ஒட்டிய வாய்ப்பந்தல்களை வைத்து காரியத்த. - காலத்தை - நகர்த்துவார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்பது நிச்சயம்.

அவர் தம்மைத் தாராண்மைவாதியாக - பேரினவாதப் பண்பில்லாதவராக - காட்டிக் கொண்டாலும், அது முழு நடிப்பு. அவரும் பேரினவாதத்தில் ஊறித் திளைத்து, அதைத் தமிழர் தாயகம் எங்கும் கட்டவிழ்த்துவிட்டு, ஆக்கிரமிப்பை முன்னெடுக்கும் கடும் பௌத்த - சிங்களத் தேசியவாதிதான் என்பதை தமிழர்களும் அவர்களின் தலைவர்களும் பட்டுணரும் வாய்ப்பை அவரது இந்த இரண்டரை ஆண்டு கால நிறைவேற்றதிகார ஆட்சிக் காலம் தந்து நிற்பது கண்கூடு.

நாட்டின் தேசிய இனப் பிரச்சினைக்கு நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய நிரந்தர தீர்வு ஒன்றைக் காணும் மேன்மையான எண்ணம் - நேர்மையான நோக்கம் - திட சங்கற்பம் - பற்றுறுதி - அவருக்குக் கிடையவே கிடையாது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தாம் வென்று, அதிகாரத்தில் தொடர்வது மட்டுமே அவரின் ஒரே இலக்கு. அவரை நம்பித் தமிழினம் இனியும் ஏமாறாதிருப்பதே புத்திசாலித்தனம்.

# ரணிலுடனான சந்திப்பில் பேச்சளவில் பல விவகாரங்களில் இணக்கப்பாடாம்

## கோவிந்தன் கருணாகரம் (ஜனா) எம்.பி. கூறுகின்றார்



பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்டோரின் விடுதலை, மயிலத்தமடு – மாதவனைப் பிரச்சனை, உள்ளூராட்சி மன்றங்களில் தற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்கல், 13ஆவது திருத்தம் முழுமையாக அமுலாக்கல், வடக்கு – கிழக்கில் அபிவிருத்தி செயற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் ஜனாதியுடனான நேற்றைய சந்திப்பில் சுட்டிக்காட்டப்பட்டு, பேச்சளவில் இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா )தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று நடத்திய சந்திப்பு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நேற்று பிற்பகல் 3 மணியளவில் ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் வடக்கு, கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், ஜனாதிபதி மற்றும் அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றது.

இதில் உண்மைக்கும், ஒற்றுமைக்கும், நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவை அமைப்பதற்கான வரைபொன்று அனைவருக்கும் பரிமாறப்பட்டது. ஜனவரி மாதத்தில் இதனை நாடாளுமன்றத்தில் சட்டமாக்குவதாகப் பேசப்பட்டது.

அத்துடன் பல்வேறு விடயங்கள் தொடர்பில் பேசப்பட்டதுடன், அபிவிருத்தி விடயங்கள் தொடர்பிலும் பேசப்பட்டன. பூநகரியில் சோளார் மற்றும் காற்றாலை திட்டங்கள், இந்தியாவுடன் இணைந்து திருகோணமலையை அபிவிருத்தி செய்வது, இந்தியாவில் இருந்து குழாய் மூலமாக மின்சாரம், எரிபொருள்கள் கொண்டுவருவதுடன், இலங்கை இந்தியாவிற்கிடையில் தரைவழிப் பாதை போன்றவற்றுக்கான திட்டங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன என்று கூறப்பட்டன.

இதன்போது எங்களாலும் பல விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டன. குறிப்பாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மூலம் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுவது தொடர்ந்த வண்ணம் இருப்பது தொடர்பிலும், கடந்த நவம்பர் மாதமளவிலும் மட்டக்களப்பில் 11 பேர் கைது செய்யப்பட்டு அதில் 4 பேர்தான் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்கள், ஏனையவர்களும் விடுவிக்கப்பட வேண்டும் எனவும் பேசப்பட்டது.

குடும்பத் தகராறு காரணமாக இருவருக்கிடையில் இடம்பெற்ற வாய்த்தர்க்கத்தையும் மாவீரர் தின நிகழ்வுக்காக நிதி கோரியதாகக் கூறி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள விடயமும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்போது மட்டக்களப்பில் ஒரு வித்தியாசமான நிலைமை இருக்கின்றது எனவும், மட்டக்களப்பில் பொலிஸ் மற்றும் பாதுகாப்புத் தரப்பினரின் செயற்பாடுகள் விரும்பத்தக்கதாக இல்லை என்றும் கருத்துப்பட ஜனாதிபதி விடயங்களைத் தெரிவித்தார். அத்துடன் கைது செய்யப்பட்டவர்களை விரைவில் விடுதலை செய்வதற்குத் தான் ஆவன செய்வதாகவும் அவர் உறுதியளித்துள்ளார்.

அத்துடன் காணிப் பிரச்சனைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. இதன்போது நாங்கள் மயிலத்தமடு – மாதவனை மேய்ச்சல் தரை விவகாரம் சம்பந்தமாகத் தெரிவித்தோம். அது தொடர்பிலும் மிக விரைவில் உரிய தீர்மானம் எடுப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும் உள்ளூரட்சி மன்றங்களிலே நீண்ட காலமாக அமைய, தற்காலிக அடிப்படையில் வேலை செய்கின்ற ஊழியர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் பல உள்ளூராட்சி மன்றங்களில் இருந்தும் முன்வைக்கப்பட்டிருந்த நிலையில் அது தொடர்பில் நாங்களும் எமது கோரிக்கையை முன்வைத்தோம். இது தொடர்பிலும் நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர் கலையரசனால் கல்முனை வடக்குப் பிரதேச செயலக விடயம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டது. அந்த விடயத்திற்கும் விரைவில் ஒரு நிரந்தரத் தீர்வை வழங்குவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மேலும் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பிலும் ஜனாதிபதி தெரிவித்தார். இதன்போது பிரதேச செயலாளர்களை மாகாண சபையின் கீழ் கொண்டு வருவதற்குத் தான் ஏற்பாடுகள் செய்து கொண்டிருப்பதாகவும் அவர் கூறினார். இதன் போது நான் தெரிவிக்கையில், 1987ஆம் ஆண்டு இலங்கை – இந்திய ஒப்பந்தம் கொண்டு வரப்பட்டு பின்னர் 1988ஆம் ஆண்டு இலங்கை அரசால் அந்த அதிகாரங்கள் மீளப் பெறப்பட்டன. ஆரம்ப காலத்தில் மாவட்ட அரச அதிபர், உதவி அரச அதிபர் என்றுதான் இருந்தது. அதனை 1988இல் மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர் என்று சொல்லி அவர்களை மத்திய அரசின் கீழ் கொண்டுவரப்பட்டு இன்றைய நிலையில் கிராம சேவை உத்தியோகத்தர் பதவி கூட மாகாண சபைக்குப் பதில் அளிக்க முடியாமல் மத்திய அரசின் கீழ் இருக்கின்றது. அதுமாத்திரமல்லாமல் நாடாளுமன்றத்தில் தாங்கள் ஜனாதிபதியாக வந்த போது அனைத்து நாடாளுமன்ற உறுப்பினரகளிடமும் 13ஆவது திருத்தத்தை அமுல்ப்படுத்துவது தொடர்பில் தெரியப்படுத்தி இருந்தீர்கள். அதற்கு அனைவரும் சம்மதம் தெரிவித்தார்கள். எனவே, 13ஆவது திருத்தச் சட்டத்தை முற்றுமுழுதாக அமுல்ப்படுத்துவதற்கு நாடாளுமன்றத்தில் எதிர்ப்பு வராது என்று நினைக்கின்றோம்.

13ஆவது திருத்தம் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வாக இல்லாது விட்டாலும் ஒரு இடைக்காலத் தீர்வாகக் கிடைக்கப்பட்டது. அதையாவது முற்றுமுழுதாக நிறைவேற்றினால் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள நாடு மிக விரைவில் மீண்டெழும் என்ற விடயங்களும் எம்மால் சுட்டிக்காட்டப்பட்டன.” – என்றார்.



# சொத்துக் குவிப்பு வழக்கு: அமைச்சர் பொன்முடிக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை!

சொத்து குவிப்பு வழக்கில் அமைச்சர் பொன்முடிக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து சென்னை உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலான தி.மு.க ஆட்சிக் காலத்தில் கனிமவளத்துறை அமைச்சராகவும் பதவி வகித்து வந்தார்.

அப்போது வருமானத்துக்கு அதிகமாக 1 கோடியே 75 லட்சம் இந்திய ரூபா சொத்துகள் சேர்த்ததாக ஊழல் தடுப்புப் பிரிவு சார்பில் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இந்த நிலையில், நேற்று அமைச்சர் பொன்முடி மற்றும் அவரது மனைவிக்கு 3 ஆண்டுகள் சிறைத்தண்டனையும், தலா 50 லட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, வருமானத்துக்கு அதிகமாக சொத்து குவித்தனர் என்று பதிவு செய்யப்பட்ட வழக்கில், தமிழக உயர்கல்வி துறை அமைச்சர் பொன்முடி, அவரது மனைவி விசாலாட்சி ஆகிய இருவரும் குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இந்த நிலையில் நேற்று தண்டனை விவரங்களை சென்னை உயர் நீதிமன்றம், அறிவித்துள்ளது.



நேற்று காலை பொன்முடி தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ, இருவரின் வயது மற்றும் மருத்துவ காரணங்களைக் கருத்தில் கொண்டு குறைந்தபட்ச தண்டனை விதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து, இருவரது மருத்துவ அறிக்கையையும் தாக்கல் செய்தார்.

மருத்துவ அறிக்கையை ஆய்வு செய்த நீதிபதி, பொன்முடி மற்றும் அவரது மனைவி விசாலாட்சிக்கு தலா மூன்றாண்டுகள் சிறைத் தண்டனையும், தலா 50 லட்சம் ரூபாய் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார்.

அபராத தொகையை செலுத்த தவறினால் ஆறு மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டார்.

மேலும் சரணடைய 30 நாட்கள் அவகாசம் வழங்கிய நீதிபதி, 30 நாட்கள் அவகாசத்திற்குள் சரணடையாவிட்டால், தண்டனையை அனுபவிக்கச் செய்வதற்கான நடைமுறைகளை விழுப்புரம் நீதிமன்றம் மேற்கொள்ள வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

# மேலும் சில தி.மு.க. அமைச்சர்கள் சிறைக்கு செல்வார்கள்: அண்ணாமலை





"தாமதமாக இருந்தாலும்கூட நல்ல தீர்ப்பு வந்துள்ளது" என அமைச்சர் பொன்முடி சிறைத்தண்டனை குறித்து தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை கருத்து தெரிவித்துள்ளார்.

வருமானத்துக்கு அதிகமாக சொத்து குவித்ததாக பதிவு செய்யப்பட்ட வழக்கில், தமிழக உயர்கல்வி துறை அமைச்சர் பொன்முடிக்கும், அவரது மனைவி விசாலாட்சிக்கும் தலா 3 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், 50 லட்சம் ரூபா அபராதமும் விதித்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பொன்முடி மீதான இந்த தீர்ப்பை தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை வரவேற்றுள்ளார். இதுகுறித்து அண்ணாமலை மேலும் பேசுகையியல்,

"பா.ஜ.க. இத்தீர்ப்பை வரவேற்கிறது. தாமதமாக இருந்தாலும்கூட நல்ல தீர்ப்பு வந்துள்ளது. நீதி நிலைநாட்டப்பட்டுள்ளது. தமிழகத்தில் ஊழல் இல்லாத சமுதாயம் அமைய இது ஒரு படிக்கல்லாக அமையும் என்று நம்புகிறோம்.

இது ஆரம்பம்தான். 2024 ஆம் ஆண்டு மத்தியில் இன்னும் நான் கைந்து தி.மு.க. அமைச்சர்கள் சிறை செல்வார்கள். இன்றைய தீர்ப்பு பணத்தை வைத்து அரசியல் செய்யும் தி.மு.கவுக்கு அனைத்தையும் புரட்டிப் போடும் தீர்ப்பு. நீதித்துறையின் செயல் பாட்டையும் ஆளுங்கட்சியையும் தொடர்புபடுத்தி பார்க்கக்கூடாது. பா.ஜ.கவில் இணைவார்கள் விமோசனம் பெறுவார்கள் என்பது எங்கள் மீதான பொய் குற்றச்சாட்டு" என்று தெரிவித்துள்ளார்.

இதேபோல் தனது எக்ஸ் தளத்தில் பொன்முடி தீர்ப்பு குறித்து கருத்து பதிவிட்டுள்ள அண்ணாமலை,

"மக்களின் வரிப் பணத்தை விஞ்ஞானப்பூர்வமாக மோசடி செய்யும் கலையில் பட்டம் பெற்றுள்ள ஊழலின் ஊற்று, இன்று உடைந்து நொறுங்கியிருக்கிறது. ஏற்கனவே ஒரு அமைச்சர் செந்தில் பாலாஜி சிறையில் இருக்கையில், சென்னை உயர் நீதிமன்றத்தின் இன்றைய தீர்ப்புக்கு பின், மற்றொரு அமைச்சர் பொன்முடி, அவருடன் சிறையில் இணைகிறார்.

தி.மு.க. அமைச்சர்களுக்கு எதிராக நிலுவையில் உள்ள எண்ணற்ற ஊழல் வழக்குகளைக் கணக்கில் கொள்ளும் போது, மத்திய சிறையில், ஸ்டாலின் அமைச்சர்களுக்கு என ஒரு தனி கட்டடம் தேவைப்படும் போலத் தெரிகிறது." என்று தெரிவித்துள்ளார்.

# அகதிகளை தடுப்பதற்கு பிரான்ஸ் புதிய சட்டம்!






பிரான்ஸுக்கு செல்லும் அகதிகள் குறித்த புலம் பெயர்வோர் சட்டத்தில் கடுமையான மாற்றங்களை கொண்டு வரும் வகையிலான மசோதா வெற்றி கரமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மசோதாவை பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவல் மேக்ரான் ரெனய்ஸான்ஸ் கட்சி மற்றும் எதிர் கட்சி தலைவரும் தீவிர வலதுசாரி சிந்தனையாளருமான மரின் லெ பென் சார்ந்த நேஷனல் ரேலி ஆகிய இரு கட்சிகளுமே ஒருமித்து கொண்டு வந்திருக்கின்றன.

பல ஆண்டுகளாக அல்ஜீரியா, மொராக்கோ, போர்ச்சுகல், துருக்கி உள்ளிட்ட பல நாடுகளில் இருந்து பிரான்ஸ் நாட்டிற்குள் சட்டவிரோத அகதிகளாக தரைவழியாகவும், கடல் வழியாகவும் நீண்ட தூர ஆபத்தான பயணங்களை மேற்கொண்டு மக்கள் உள்ளே நுழைவது தொடர்கதையாகி வருகிறது.

இவ்வாறு உள்ளே நுழையும் அகதி களால் பல்வேறு உள்நாட்டு சிக்கல்கள் எழுந்தன.

இதனை கருத்திற் கொண்டே மேற்படி மசோதா வெற்றிகரமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது குறித்து பிரான்ஸ் ஜனாதிபதி மேக்ரான் கருத்து தெரிவிக்கையில்,

“நாட்டில் புலம் பெயர்பவர்களால் பிரச்சனை இருப்பது உண்மைதான். இதனால் உள்நாட்டில் அமைதியின்மை தோன்ற கூடிய நிலை இருந்தது.

அதனை தடுக்க வேண்டியது அரசின் கடமை. வெள்ளம் போல் உள்ளே நுழையும் அகதிகளை தடுக்கும் கவச மாக இந்த சட்டம் அமையும்” என தெரிவித்தார்.

# அணுசக்தி கொள்கையில் மாற்றம் இல்லை: வடகொரிய தலைவர் பகிரங்க எச்சரிக்கை!

வடகொரியாவின் அணுசக்தி வியூ கத்தின் பரிணாம வளர்ச்சியின் மூலம் தனது அணுசக்தி கொள்கையில் மாற்றம் இல்லை என்றும், அணுஆயுத ஆத்திரமூட்டல் ஏற்பட்டால் அணு ஆயுத தாக்குதலுக்கு பதிலடி கொடுக்க தனது நாடு தயாராக இருப்பதாகவும் கிம் ஜாங் உன் தெரிவித்துள்ளார்.

வடகொரியாவின் ஏவுகணை திட்டத் துடன் தொடர்புடைய படையினர் குழுவை சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

சமீபத்தில் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனை வெற்றி கரமாக நடத்தப்பட்டதற்கு வடகொரிய தலைவர் கிம் ஜாங் உன் இராணுவ வீரர்களை சந்தித்து வாழ்த்து தெரி வித்தார்.

இந்த ஏவுகணை சோதனைகள், தனது படைகளின் வலிமையையும், எந்தச் சூழலையும் எதிர்கொள்ளும் திறனையும் வெளிப்படுத்தும் என்று வடகொரியத் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமெரிக்காவில் உள்ள எந்த இலக் கையும் தாக்கும் திறன் கொண்ட கண்டம் விட்டு கண்டம் பாயும் அணு ஆயுத ஏவுகணையை வடகொரியா கடந்த திங்கட்கிழமை சோதனை செய்தது.

இது தொடர்பில் தென்கொரியா,



ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் உன்னிப்பாக கவனம் செலுத் தியுள்ளன.

வடகொரியாவின் பாலிஸ்டிக் ஏவுகணை சோதனைக்கு கண்டனம் தெரிவித்து மூன்று நாடுகளும் கூட்டாக அறிக்கை வெளியிட்டன.

முன்நிபந்தனைகள் இன்றி விரிவான பேச்சுவார்த்தையில் ஈடுபடுமாறு வடகொரியாவிடம் அவர்கள் பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கிம் ஜாங் உன்னைத் தவிர, வட கொரியாவின் வலிமையான நபராகக் கருதப்படும் அவரது சகோதரி கிம் யோ ஜாங்கும் இந்த தொடர் நிகழ்வுகள் குறித்து மற்றொரு அறிவிப்பை வெளி யிட்டுள்ளார்.

வடகொரியாவின் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனை தொடர்பாக ஐநா பாதுகாப்பு கவுன்சிலின் சிறப்பு கூட்டத்தை நடத்துவதை கண் டிப்பதாக அங்கு அவர் கூறியுள்ளார்.

இது நாட்டின் தற்காப்பு உரிமையை மீறும் செயலாகும் என அவர் குறிப் பிட்டுள்ளார். அமெரிக்கா மற்றும் தென் கொரியாவின் பொறுப்பற்ற செயற்பா டுகள் கொரிய தீபகற்பத் தில் பதற் றத்தைஉருவாக்க உதவியுள்ள தாகவும், அதற்கு பாதுகாப்பு சபையும் பொறுப்பேற்க வேண்டும் எனவும் கிம் ஜாங் உன்னின் சகோதரி கிம் யோ ஜாங் தெரிவித்துள்ளார்.

# எம்பிலிபிட்டி சிறையில் கைதி ஒருவர் தப்பினார்



எம்பிலிபிட்டி சிறைச்சாலை கைதி ஒருவர் வயிற்றில் ஏற்பட்டுள்ள சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிறைச்சாலை அதிகாரிகளிடமிருந்து தப்பிச் சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

தப்பிச்சென்றவர் எம்பிலிப்பிட்டி பிரதேசத்தை சேர்ந்த 25 வயதுடையவராவார்.

இவர் 250 மில்லிகிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருளுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட பின்னர் 10,000 ரூபா அபராதம் செலுத்த நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அபராதத் தொகையை செலுத்த முடியாததால் இவரை எம்பிலிப்பிட்டி சிறைச்சாலையில் எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறையியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில் இவர் வயிற்றில் ஏற்பட்டுள்ள சுகயீனம் காரணமாக எம்பிலிபிட்டிய பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிறைச்சாலை அதிகாரிகளிடமிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

தப்பிச் சென்ற கைதியைத் தேடும் பணியில் சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் எம்பிலிபிட்டி பொலிஸார் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர்.




# மேய்ச்சல் தரைக்கான போராட்டம் நாளை நூறு நாள்களை எட்டுகிறது

மேய்ச்சல் தரைகளை மீட்டு தருமாறு தெரிவித்து மட்டக்களப்பு மயிலத்தமடு, மாதவனை கால்நடை பண்ணையாளர்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் நாளை 23 ஆம் திகதியுடன் நூறு நாள்களை எட்டவுள்ளது.

இந்நிலையில், தமது நியாயமான கோரிக்கைகளுக்கான தீர்வுகள் இதுவரையில் வழங்கப்படவில்லை, எனவே மாபெரும் போராட்டத்திற்கு அழைப்பு விடுப்பதாக மயிலத்தமடு, மாதவனை கால்நடை பண்ணையாளர்கள் கமநல அமைப்பின் தலைவர் சீ.நிமலன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

“எமது கோரிக்கைகள் குறித்து மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கு பல முறை கடிதம் எழுதியுள்ளோம். ஆனால், இதுவரையில் ஒரு கடிதத்திற்குக் கூடப் பதில் வழங்கப்படவில்லை.

எங்களுடைய மேய்ச்சல் தரை பிறிதொரு தரப்பினரால் அபகரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அரசியல்வாதிகளோ அல்லது அதிகாரிகளோ கண்டுகொள்ளவில்லை.

எனவேதான் பாரிய போராட்டமொன்றினை முன்னெடுக்க தீர்மானித்துள்ளோம்.

இந்தப் போராட்டத்திற்கு சிவில் சமூக அமைப்புகள், அரசியல்வாதிகள். பொது அமைப்புகள், விவசாய அமைப்புகள், பல்கலைக்கழக மாணவர்கள், மதத்தலைவர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றோம்.” என தெரிவித்தார்.



# மொட்டு தேசிய அமைப்பாளர் பதவி நாமலுக்கு வழங்க பஸில் எதிர்ப்பாம்

ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்குள் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய மாநாடு அண்மையில் இடம்பெற்றிருந்தது. இதில் மஹிந்த ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட கட்சியின் முக்கிய தலைவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

கட்சியின் தலைவராக மீண்டும் மஹிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டார். மாநாடு நிறைவடைந்த பின்னர் அண்மையில் ஊடகவியலாளர்களிடம் பேசிய அவர் அரசியலில் இருந்து ஓய்வுபெறும் எண்ணம் கிடையாது எனக் கூறியிருந்தார்.

இந்த மாநாடு முடிந்த நிலையில், கட்சியின் நிறைவேற்று சபையும் கூடியிருந்தது. இதன் போது கட்சியின் முக்கிய பதிவிகளுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்.

அந்த வகையில், கட்சியின் செயலாளராக சாகர காரியவசம் மீண்டும் நியமிக்கப்பட்டிருந்தார். எனினும், முக்கியப் பதவியான தேசிய அமைப்பாளர் பதவிக்கு யாரும் நியமிக்கப்படவில்லை.

முன்னதாக கட்சியின் தேசிய அமைப்பாளராக முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ செயற்பட்டு வந்த நிலையில், தற்போது அந்தப் பதவி வெற்றிடமாகியுள்ளது.

இந்நிலையிலேயே, பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பதவியை பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவிற்கு வழங்குவதற்கு பஸில் ராஜபக்ஷ கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த வருட மாநாடு மற்றும் நிறைவேற்று சபையில் நாமல் ராஜபக்ஷவின் பெயர் அந்த பதவிக்கு முன்மொழியப்படவிருந்த நிலையில், எதிர்ப்பு காரணமாக அந்த பிரேரணைக்கான அங்கீகாரம் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பஸில் ராஜபக்ஷ வெளிநாடு செல்லவிருந்த நிலையில், கட்சியின் நிறைவேற்று சபையும் நீண்ட நாட்களுக்கு பின்னர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இல்லத்தில் கூடியது.

கட்சியின் ஒருசில பதவிகளுக்கு மட்டுமே பெயர்கள் முன்மொழியப்பட்டன. தேசிய அமைப்பாளர் பதவி வெற்றிடமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டின் பல பகுதிகளிலும் மண்சரிவு அபாய எச்சரிக்கை

மண்சரிவு காரணமாக பதுளை – ஹாலிஎல பிரதேச செயலாளர் பிரிவில் 8 குடும்பங்களைச் சேர்ந்த 39 பேர் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஹாலிஎல – ஸ்பிரிங்வெலி தோட்டத்தின் நல்லமலை பிரிவில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதாக பதுளை மாவட்ட இடர் முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் ஈ.எல்.எம்.உதயகுமார தெரிவித்துள்ளார்.

தேசிய கட்டட ஆய்வு நிறுவக அதிகாரிகள் அந்த இடத்தை பார்வையிடவுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பலாங்கொட, ஒபநாயக்க, உடுவெல, ஹொரான்கந்துர பிரதேசத்தில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதாக அனரத்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது .

மண்சரிவு ஏற்பட்ட இடங்களுக்கு கீழே உள்ள வீடுகள் ஆபத்தான நிலையில் உள்ளன என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

# திண்ம, மலக் கழிவு அகற்றல் மன்னார் நகரில் ஸ்தம்பிதம்!

## நீதிமன்றத்தின் உத்தரவையடுத்து பிரதேசமே நரகமாகும் நிலைமை

## வைத்தியசாலை நோயாளர் விடுதிகள் மூடப்பட வேண்டிய பேரவலம்








**(மன்னார் நிருபர்)**

மன்னார் நகர சபைக்குட்பட்ட பகுதியில் மன்னார் நகர சபையினால் முன்னெடுக்கப்பட்டு வந்த மலக்கழிவு மற்றும் திண்மக்கழிவு அகற்றும் நடவடிக்கைகள் நேற்று வியாழக்கிழமை முதல் இடை நிறுத்தப்படுவதாக மன்னார் நகர சபையின் செயலாளர் எக்ஸ்.எல்.பிரிட்டோ லெம் பேட் தெரிவித்தார்.

மன்னார் நகர சபையினால் முன்னெடுக்கப்பட்டு வந்த கழிவகற்றல் நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள தடங்கலை நிவர்த்தி செய்வது குறித்து மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் அதன் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் நேற்று வியாழக்கிழமை மாலை மன்னார் நகர மண்டபத்தில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

அதில் மன்னார் நகர சபையின் செயலாளர். மாவட்ட உதவி அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், உதவி பிரதேச செயலாளர், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், உணவக உரிமையாளர்கள், அரச சார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

அங்கு தெரிவிக்கப்பட்ட கருத்துக-ளின் சாராம்சம் வருமாறு:-

மன்னார் - யாழ்ப்பாணம் பிரதான வீதி, பாப்பாமோட்டை பகுதியில் மன்னார் நகர சபைக்குச் சொந்தமான மலக்கழிவு மற்றும் திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தில் மலக் கழிவு மற்றும் திண்மக் கழிவுகளைக் கொட்டிச் சேகரிக்க கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றம் கடந்த 23 ஆம் திகதி தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதனால் மன்னார் நகர சபையினால் மன்னார் நகர பகுதியில் முன்னெடுக்கப்பட்ட திண்மக்கழிவு சேகரிப்பு மற்றும் மலக்கழிவு அகற்றல் ஆகிய நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட்டன.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பாப்பாமோட்டை பகுதியில் இந்தத் திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையம் அமைந்துள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன், சுமார் 6 கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டில் கடந்த 2012 ஆம் ஆண்டு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஊடாக அமைக்கப்பட்ட இந்தத் திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையம் மன்னார் நகர சபையிடம் கையளிக்கப்பட்டது.

2014 ஆம் ஆண்டு முதல் மன்னார் நகர சபைப் பிரிவில் சேகரிக்கப்படுகின்ற திண்மக்கழிவுகள் மற்றும் மலக் கழிவுகள் அகற்றப்பட்டு, இந்த நிலையத்திற்குக் கொண்டு வரப்பட்டு பாதுகாப்பாக சேகரிக்கப் படுகிறது.

மன்னார் நகர சபை பிரிவில் சேகரிக்கப்படும் திண்மக்கழிவு மற்றும் மலக் கழிவுகளும்,ஏனைய பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள மலக் கழிவுகளும் இங்கு சேகரிக்கப் பட்டு வருகின்றன. இந்தச் செயல் பாடுகள் கடந்த 10 வருடங்களாக இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் கொழும்பில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்று மன்னார் நகர சபைக்குச் சொந்தமான மலக்கழிவு மற்றும் திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையத்திற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளது.

குறிப்பாக இதனால் இந்தப் பகுதியில் நிலத்தடி நீர் மாசு படுவதாகவும், அந்தப் பகுதி பறவைகள் சரணாலயத்திற்கு உரிய இடம் எனவும் குறிப்பிட்டு அண்மையில் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். இதையடுத்து அந்த மலக்கழிவு மற்றும் திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தில் எவ்வித கழிவுகளும் கொட்டப்படக் கூடாது என்று நீதிமன்றம் தடை உத்தரவை பிறப்பித்துள்ளது.

கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைவாக மன்னார் நகர சபைப் பிரிவில் மன்னார் நகர சபையினால் முன்னெடுக்கப்பட்டு வந்த மலக்கழிவு மற்றும் திண்மக் கழிவு அகழ்வு நடவடிக்கைகள் நிறுத் தப்பட்டுள்ளன.

இதனால் மன்னார் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். அகழ்வு செய்யப்படுகின்ற சிறு கழிவுகளைக்கூட கொட்ட

**(14ஆம் பக்கம் பார்க்க)**



# கஞ்சா கலந்த போதை மாத்திரைகளுடன் வெலிப்பன்ன பிரதேசத்தில் ஒருவர் கைது

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

வெலிப்பன்ன பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாடசாலைகள் அமைந்துள்ள பிரதேசத்திலுள்ள கடைகளைத் திடீர் சோதனைக் குட்படுத்தும் திட்டத்தின் அடிப்படையில் கல்மத்த பிரதேசத்திலுள்ள பிரபல பாடசாலை ஒன்றை மையப்படுத்தி அதன் சுற்று வட்டாரத்திலுள்ள கோழியிறைச்சி விற்பனை நிலையத்தை சோதனையிட்ட போது கஞ்சாக் கலந்த 230 போதை மாத்திரைகள் கண்டு பிடிக்கப்பட்டன. சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் ஏற்கனவே இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபட்டு பிணையில் விடுவிக்கப்பட்டவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# யாழில் - 4 ஆம் திகதி; வவுனியாவில் - 5 ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் இணைப்புக் குழு கூடும்!

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம், டிச.22

யாழில் 4ஆம் திகதியும், வவுனியாவில் 5 ஆம் திகதியும் ஜனாதிபதி தலைமையில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களிற்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்திலும் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மூன்று மாவட்டங்களிற்கான கூட்டம் வவுனியா மாவட்டச் செயலகத்திலும் இடம்பெறவுள்ளது.

இவ்வாறு வடக்கில் இடம்பெறும் நிகழ்வுகளிற்காக வடக்கே வரும் ஜனாதிபதி இரு நாள்களும் வடக்கில் தங்கி நிற்கும் அதேசமயம் பல பொது அமைப்புகள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் பலரையும் சந்திக்கவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# திண்ம, மலக் கழிவு அகற்றல்...

**(13ஆம் பக்கத் தொடர்ச்சி)**

இடம் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் உரிய தீர்வு கிடைக்கும் வரை நேற்று வியாழக்கிழமை முதல் மன்னார் நகர சபைக்குட்பட்ட பகுதியில் மன்னார் நகரசபையினால் முன்னெடுக்கப்பட்டு வந்த மேற்படி கழிவு அகழ்வு நடவடிக்கைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவர் இது தொடர்பாகத் தெரிவித்த கருத்துகள் வருமாறு:-

மன்னார் பொது வைத்தியசாலையின் மருத்துவக் கழிவு, உணவுக் கழிவு மற்றும் மலக்கழிவுகள் அகற்றப்படாமையினால் மன்னார் பொது வைத்தியசாலைக்குரிய பிராந்திய சுகாதாரக் கழிவகற்றல் நிலையம் சுகாதாரச் சீர்கேட்டுக்கு உள்ளாகியுள்ளதுடன் துர்நாற்றமும் வீசி வருகிறது.

அதே நேரம் நோயாளர் விடுதிகளில் உள்ள மலசல கூடங்கள் நிறைந்து வழிவதால் விடுதிகளை நோயாளிகள் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது மழை காரணமாக டெங்கு நோயும் பெருகும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக கழிவகற்றல் செயற்பாடுகள் முன் னெடுக்கப்படாத பட்சத்தில் விடுதிகளை மூட வேண்டிய நிலை ஏற்படும். ஏற்கனவே சேகரிக்கப்பட்டு களஞ்சியபடுத்தப்பட்ட குப்பைகள் அகற்றப்படாமல் தொற்று நோய்கள் ஏற்பட வாய்ப்புக் காணப்படுகின்றது.

வைத்தியசாலை மாத்திரமின்றி பொது இடங்கள்,வீடுகள்,அலுவலகங்கள் உணவகங்களிலும் குப்பைகள் அகற்றப்படாத நிலையே காணப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் தீர்வை வழங்க முடியாத பட்சத்தில் மாற்று வழிகளையாவது மேற்கொள்ள வேண்டும். அல்லது ஒரு சில தினங்களில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை இழுத்து மூடப்பட வேண்டிய நிலை ஏற்படும். - என அந்த வைத்தியர் தெரிவித்தார்.

எதிர்வரும் வாரம் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இடம் பெற உள்ள வழக்கு விசாரணைகளை தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



# பன்முகப்படுத்தப்பட்ட திட்டத்திற்கான நிதி ஜனவரி முதல் வாரத்தில் கிட்டுமாம்

## ஜனாதிபதி ரணில் உறுதிபடத் தெரிவிப்பு

வரவு – செலவுத் திட்டத்தில் மாவட்டங்களின் பன்முகப்படுத்தப்பட்ட திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி எதிர்வரும் ஜனவரி மாதத்தின் முதல் வாரத்தில் மாவட்ட செயலாளர்களுக்கு வழங்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, மாவட்ட பன்முகப்படுத்தப்பட்ட திட்டத்திற்காக அடுத்த ஆண்டுக்கான பாதீட்டில் 11,250 மில்லியன் ரூபா முன்மொழியப்பட்டுள்ளது.

3 வருடங்களின் பின்னர் இந்த நிதி ஒதுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

















# நாட்டின் பணவீக்கம் நவம்பர் மாதம் உயர்வு

தேசிய நுகர்வோர் விலை சுட்டெண் அடிப்படையிலான பணவீக்கம் நவம்பர் மாதத்தில் அதிகரித்துள்ளது.

தொகை மதிப்பீடு மற்றும் புள்ளி விவரத் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஒக்டோபர் மாதத்தில் 1 சதவீதமாக இருந்த தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான பணவீக்கம் நவம்பர் மாதத்தில் 2.8 சதவீதமாக அதிகரித்துள்ளது.

அதேநேரம், உணவு பணவீக்கமானது ஒக்டோபர் மாதத்தில் மறை 5.2 சதவீதமாக காணப்பட்ட நிலையில், நவம்பர் மாதத்தில் மறை 2.2 சதவீதமாக அதிகரித்துள்ளது.

அத்துடன், உணவல்லாப் பணவீக்கம் ஒக்டோபர் மாதம் 6.3 சதவீதமாக காணப்பட்ட நிலையில், நவம்பர் மாதத்தில் 7.1 சதவீதமாக அதிகரித்துள்ளது.




# உயர்தரப் பரீட்சார்த்திகள் அனுமதி பத்திரத்தில் திருத்தம் மேற்கொள்ள இன்று வரை அவகாசம்

அடுத்த மாதம் 4 ஆம் திகதி இடம்பெறவுள்ள கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள விண்ணப்பதாரர்களுக்கான அனுமதி பத்திரத்தில், மொழி, பிறந்த திகதி மற்றும் பெயர் என்பவற்றை இணையவழி ஊடாக திருத்திக்கொள்வதற்காக வழங்கப்பட்ட கால அவகாசம் இன்று நள்ளிரவு வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைகள் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அரச மற்றும் அரச அனுசரணையின் கீழ் இயங்கும் தனியார் பாடசாலைகளின் மூன்றாம் தவணையின் முதலாம் கட்ட கற்றல் செயற்பாடுகள் இன்றுடன் நிறைவு செய்யப்படவுள்ளன.

கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்ட கற்றல் செயற்பாடுகள், அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி மீள ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதித் தேர்தலில் மொட்டு தன் வேட்பாளரை நிறுத்துமாம்!

## ரணில் போட்டியிடார் என்கிறார் உதயங்க



ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுன வேட்பாளரை நிறுத்தும். தற்போதைய ஜனாதிபதியை வேட்பாளராக நியமிக்காது என ரஷ்யாவிற்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய உறவினரான அவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாடுகளை கடுமையாக விமர்சித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை மீட்பதற்கான தற்போதைய ஜனாதிபதியின் திறன் குறித்து தனக்கு சிறிதளவும் நம்பிக்கை இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகளுக்கு ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான நல்லாட்சி அரசாங்கமே காரணம் எனத் தெரிவித்துள்ள உதயங்க, 2015 முதல் 2019 வரை கடன் பெருமளவிற்கு அதிகரித்தமைக்கு நல்லாட்சி அரசாங்கமே காரணம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்திலேயே கடன் பலமடங்காக அதிகரித்தது. எங்கள் கட்சி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்துள்ளதால் அவருக்கு ஆதரவளிக்க வேண்டும். ஆனால் அவரால் பொருளாதாரத்திற்கு புத்துயுர் அளிக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கில்லை என அவர் தெரிவித்துள்ளார்

ஜனாதிபதி தேர்தலிற்கு முன்னர் நாடாளுமன்ற தேர்தலே இடம்பெறும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுன தனது வேட்பாளரை நிறுத்தும். ரணில் விக்கிரமசிங்கவை கட்சி நியமிக்காது. ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் போட்டியிடமாட்டார் என உங்களிற்கு உறுதியளிக்க முடியும். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அநுராதபுரம் வனஜீவராசிகள் வலயப் பிரிவில் யானை - மனித மோதல் இவ்வருடம் தீவிரம்!

- 40 பேர் உயிரிழப்பு
- 47 பேருக்கு அங்கவீனம்
- 83 காட்டு யானைகள் பலி
- உடைமைகள் நாசம்



அநுராதபுரம் வனஜீவராசிகள் வலயத்தில் கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் யானை - மனித மோதலினால் சுமார் 40 பேர் உயிரிழந்துள்ளனர். 83 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளன.

இதனை அநுராதபுரம் வலய வனவிலங்கு காப்பாளர் டபிள்யூ.எம்.கே.எஸ். சந்திரரத்ன தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் மாவட்ட மேலதிக செயலாளர் (காணி) சந்தியா என். ஜி.அபேசேகர தலைமையில் இடம்பெற்ற இழப்பீட்டுக் குழு கூட்டத்திலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

காட்டு யானைகளினால் 40 பேர் உயிரிழந்துள்ளமையுடன், 47 பேர் அங்கவீனமடைந்துள்ளனர் எனவும், 710 வீடுகள் மற்றும் ஏனைய உடமைகள் பெருமளவில் சேதப்படுத்தப்பட்டுள்ளன எனவும், இந்த வருடம் ஒக்டோபர் மாதம் வரை 5 கோடி49 லட்சம் ரூபா நட்டஈடாக வழங்கப்பட்டுள்ளது எனவும் வலய வனவிலங்குக் காப்பாளர் தெரிவித்துள்ளார்.

49 காட்டு யானைகள் சட்டவிரோத மின்சாரப் பொறிகளால் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளன எனவும், மேலும் 34 யானைகள் சுட்டுக் கொல்லப்பட்டன அல்லது இயற்கையான சூழ்நிலையில் உயிரிழந்துள்ளன எனவும் வலய வனவிலங்கு காப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 22.12.2023




இன்று மந்தமான நாளாக காணப்படும். உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் சில சௌகரியங்களை தியாகம் செய்ய வேண்டியிருக்கும் எனவே நனறாக சிந் தித்து செயல்படுவது நல்லது.

பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் பணி களை ஒழுங்குமுறைப்படுத்தி பணியாற்ற வேண்டும். உங்கள் சகபணியாளர்களுடன் கருத்து வேற்றுமை காணப்படும்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. இன்றைய நாள் உங்கள் துணையுடன் கழிப்பதற்கு உகந்த நாள் அல்ல.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்காது. உங்கள் நிதிகளைக் கையாள்வதில் சற்று கடினம் காணப்படும்.

மனஎழுச்சி மற்றும் பாதுகாப்பற்ற உணர்வை தவிர்க்க வேண்டும். இது உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.




இன்றைய செயல்களினால் நற் பலன்கள் கிடைக்காது. ஆன்மீகச் செயல் களில் ஈடுபடுவதன் மூலம் நீங்கள் மகிழ்ச்சியை ஏற்படுத்திக் கொள்ளலாம். இது பதட்டத்தைக் குறைத்து வெற்றிக்கு வழிகாட்டும்.

பணிகளை எளிதாக இயற்ற இயலாது. பணிகளில் தாமதங்கள் காணப்படும்.

இன்று காதலில் சிறப்பாக எதையும் ஆற்ற இயலாது. உங்கள் துணையை சமாளிப்பது இன்று கடினமாக உணர்வீர்கள்.

இன்று பணம் ஒரு பிரச்சினையாக இருக்கும். பணம் சேமிப்பதற்கான வாய்ப்பு இருக்காது.

தாயின் உடல்நிலை கவலையை அளிக்கும்.அதற்காக செலவுகள் செய்ய நேரும்.




உங்கள் இலக்குகளை நீங்கள் அடைந்து மகிழ்ச்சியுடன் காணப்படு வீர்கள். இன்று அமைதியுடன் காணப் படுவீர்கள். சில பயனுள்ள முடிவுகளை எடுப்பீர்கள்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். நீங்கள் செய்யும் பணிகளுக்கு உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்களிடம் நேர்மறையான மனநிலை காணப்படும். அதை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்வீர்கள். இன்று உங்களுக்கு மகிழ்ச்சியான நாள்.

இன்று பணப்புழக்கம் சீராக இருக்கும் நிதிநிலையை மேம்படுத்துவதற்கான ஆற்றல் உங்களிடம் இருப்பதை நீங்கள் உணர்வீர்கள்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது.




இன்று நாள் முழவதும் நேர்மறை சிந்தனைகளுடன் காணப்படுவீர்கள். உங்கள் சுய முயற்சி மூலம் செயல்களை விரைந்து முடிப்பீர்கள்.

நீங்கள் சரியான பணி அட்டவணை யின்படி பணிகளை மேற்கொள்வதன் காரணமாக உங்கள் பணியில் முன்னனியில் இருப் பீர்கள். இது உங்களுக்கு வெற்றியை அளிக்கும்.

உங்கள் தாய் தந்தையரிடம் நல்லுறவு கொண் டிருப்பீர்கள். உங்கள் காதல் வாழ்க்கைக்கு அவர்களின் ஆலோசனை கேட்பது நல்லது.

இன்று அதிக பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பு உள்ளது. நீங்கள் பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்கள் தன்னம்பிக்கை உங்களை ஆரோக்கியமாக வைத் திருக்கும்.




அதிர்ஷ்டத்தை நம்புவதைவிட உங்கள் முயற்சியில் நம்பிக்கை வையுங்கள். இன்று பயணங்கள் ஏற்படலாம்.ஆன்மீக அன்பரின் ஆலோசனை கிடைக்கப் பெற்று அத னால் திருப்தி அடைவீர்கள்.

உங்கள் வேலையில் சில விரும்பத்தகாத சூழ் நிலையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் அதன் காரணமாக உங்களுக்கு பணிமாற்றத்திற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் சூடான விவாதங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. உங்கள் துணையுடன் நல்லிணக்கத் தைப் பேண வேண்டும்.

பண வரவிற்கான வாய்ப்பு குறைந்து காணப்படு கின்றது. கூடுதல் சுமை காணப்படும்.

இன்று மனஅழுத்தம் காரணமாக தலைவலி மற்றும் சளி உபாதைகள் காணப்படும்.




இன்று தடைகளை சந்திக்க நேரும். ஆனால் கவலைப்பட வேண்டியதில்லை. அவசரமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

இன்று உங்களுக்கு இறுக்கமான வேலை காணப்படும். என்றாலும் நீங்கள் செய்யும் வேலையில் வெற்றி காண்பீர்கள். இன்று நீங்கள் வேலையில் மும்மரமாக இருப்பீர்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. இன்று அமைதி யான உறவைப் பேண பல தடங்கல்கள் ஏற்படலாம்.

இன்று சம்பாதியத்தை விட செலவு அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு சுமையாகிவிடும். பணத்தை கையாள்வதில் கவனம் தேவை.

உங்கள் ஆரோக்கியத்திற்கான பொது பரிசோதனை செய்து கொள்ளுங்கள். தலைவலி மற்றும் உயர் அழுத்த உபாதைகள் ஏற்படலாம்.




உங்கள் பணிகள் இன்று சுமுகமாக நடக்க நீங்கள் மிகுந்த அனுசரனையுடன் இருக்க வேண்டும். நீங்கள் நம்பிக்கை இழக்க நேரலாம். தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ளுங்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும். உங்கள் சக பணியாளர்களுடன் ஜாக்கிர தையாகப் பழக வேண்டியது அவசியம்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் துணையுடன் நல்லுறவு காண்பது கடினம். அமைதியுடனும் பொறுமையுடனும் இருக்க வேண்டியது அவசியம்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இல்லை. பணத் தைக் கையாள்வதில் சிரமம் காணப்படும்.

உங்கள் வாழ்க்கைத்துணையின் ஆரோக்கியத் திற்காக கூடுதல் செலவுகளை செய்ய நேரிடும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.




இன்று உங்கள் தன்னம்பிக்கை மற்றும் நம்பிக்கைக்கு சாதகமான நாள். உங்கள் முயற்சி மூலம் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்களுக்கு இடப்பட்ட பணிகளை விரைந்து முடிப்பீர்கள். உங்கள் ஆற்றலை நீங்கள் உணரும் வகையில் உங்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

இன்று உறவு சுமுகமாக இருக்காது. உங்கள் துணை யுடன் கருத்து வேறுபாடு ஏற்படும் அமைதியாக இருக்க வேண்டும். தேவையற்ற பேச்சுக்களை தவிர்க்க வேண்டும்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். சேமிக்கும் பழக்கத்தை நீங்கள் உருவாக்கலாம்.

காது மூக்கு தொண்டை பிரச்சினைகள் ஏற்படலாம். தலைவலி பாதிப்புகள் ஏற்படலாம்..

# இன்றைய ராசி பலன்கள் - 22.12.2023




இன்று மந்தமான நாளாக இருக்கும். உங்கள் பணிகளை முடிப்பதில் சற்று சிரமம் இருக்கும். மனஅழுத்தத் திலிருந்து விடுபட யோகா அல்லது தியானம் மேற்கொள்வது உங்களுக்கு பயனளிக்கும்.

இன்று உங்களுக்கு அதிகப் பணிகள் காணப்படும். அதை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

கருத்து வேறுபாடு காரணமாக உங்கள் பிரியமானவர் உங்கள் மீது குற்றம் காண்பார்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இல்லை. பணத்தை கையாள்வதில் சிரமங்கள் காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. சளி மற்றும் தலைவலியால் பாதிக்கப்படலாம்.




இன்று சாதகமான நாள். தன்னம்பிக்கை நிறைந்து காணப்படுவீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

பணியிடத்தில் நல்ல பெயர் எடுப்பீர்கள். உங்களுக்கு நிறைய வாய்ப்புகள் கிடைக்கும். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று உறவுநிலை சுமாராக இருக்கும். உங்கள் துணையுடன் அனுசரித்துப் போவது மற்றும் திறமையான தொடர்பாடல் நல்லது.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். பணவரவிற்கான சாத்தியம் உள்ளது.

இன்று ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இல்லாமல் திடமான ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்றைய நாள் சராசரி நாளாக இருக்கும். எதிர்மறை எண்ணங்களும் பாதுகாப்பற்ற உணர்வும் உண்டாகும். இருப்பதைக் கொண்டு மகிழ்ச்சி அடையுங்கள்.

பணியிடத்தில் அசௌகரியங்களை உணர்வீர்கள். சக பணியாளர்களுடன் பழகுவதில் சில பிரச்சினைகள் ஏற்படும்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் காதலை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவதில் சில சிக்கல்கள் காணப்படும்.

தேவையற்ற செலவினங்களுக்கான சாத்தியங்கள் காணப்படுகின்றது. பணத்தை கையாள்வதில் சிரமங்கள் காணப்படும்.

இன்று தலைவலிக்கான வாய்ப்புகள் உள்ளது.கூடுதல் பொறுப்புகள் காணப்படும்.




சொத்துக்களை இழப்பதற்கான வாய்ப்பு உள்ளது. கவனமாக இருக்க வேண்டியது அவசியம். உங்கள் மனதை மகிழ்ச்சியுடன் வைத்துக் கொள்ளுங்கள்.

உங்கள்பணியில்உங்களுக்குதிருப்தி ஏற்படாது. சக பணியாளர்களிடம் நல்லுறவு இருக்காது. இன்று அனுசரித்துச் செல்வது உங்களுக்கு நல்லது.

உங்கள் துணையிடம் பொறுமையைக் கையாள வேண்டும். நீங்கள் மகிழ்ச்சியான மனநிலையில் இருந்தாலும் உங்களின் பிரியமானவர் மகிழ்ச்சியுடன் காணப்படமாட்டார்.

நிதிநிலை சிறப்பாக இல்லை. கூடுதல் செலவினங்களை எதிர்கொள்ள நேரும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

ஆரோக்கியத்தில் அலட்சியமாக இருக்காதீர்கள்.







# வவுணதீவில் போதை பொருள் வியாபாரியின் வீட்டை முற்றுகையிட்டு பொலிஸார் தேடுதல்

## ஒன்றரைக் கிலோ கஞ்சாவுடன் பெண் வியாபாரி கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வவுணதீவு பொலிஸ் பிரிவில் உள்ள 10 ஆம் கட்டைப் பிரதேசத்தில் போதைப்பொருள் வியாபாரி ஒருவரின் வீட்டை முற்றுகையிட்ட பொலிஸார் ஒரு கிலோ 565 கிராம் கஞ்சாவுடன் பெண் வியாபாரி ஒருவரை நேற்று வியாழக்கிழமை மாலையில் கைது செய்துள்ளனர் என மாவட்டக் குற்ற விசாரணை பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.




மாவட்டக் குற்ற விசாரணைப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அமல் ஏ.எதிரிமான வின் ஆலோசனைக்கமைய, மாவட்டக் குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகரி டி.எஸ்.எஸ்.கே. தெலங்காவலகே தலைமையிலான சப் இன்ஸ்பெகடர் எம்.எம்.ஏ.ஷகி மற்றும் பொலிஸ் குழுவினர் நேற்று முன்தினம் மாலை இந்த வியாபாரியின் வீட்டை முற்றுகையிட்டு சோதனை நடாத்தினர்.

இதன்போது அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு கிலோ 565 கிராம் கஞ்சாவை மீட்டதுடன் கஞ்சா வியாபாரியான பெண் ஒருவரை கைது செய்தனர். அவரை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



# காரைதீவில் நடைபெற்ற பூப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அருளானந்தம் ஞாபகார்த்த பூப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டிகள், காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

இப்போட்டியின் அதிதிகளாக எஸ்கோ அமைப்பின் செயலாளர் சி.நந்தகுமார், விபுலானந்த மத்திய கல்லூரியின் முதல்வர் எம்.சுந்தரராஜன், உடற்கல்வி ஆசிரியர் திரு ஜே.சோபிதாஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்ததோடு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வெற்றிக் கிண்ணங்களையும் வழங்கி வைத்தனர்.



